## 29.30 பகுதிநேர பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை எண். 192 நாள் : 10.6.1997

படிக்க :

ஊரக வளர்ச்சி துறையின் 66 எண்ணும் 3.2.90 நாளும் இட்ட நிலை அரசாணை.

**ஆணை**

கிராம ஊராட்சிகளில் பணியாற்றும் பகுதிநேர தொகுப்பு ஊதியப் பணியாளர்களான துப்புரவுப் பணியாளர்களுக்கும் விசைப்பம்பு / மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கும் ஊதிய உயர்வு அளிப்பது குறித்து அரசு நன்கு ஆய்வு செய்தது. மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் காலை அல்லது மாலையில் சில மணி நேரத்திற்கு மேல் பணியாற்ற வேண்டிய அவசியம் கிராம ஊராட்சிகளில் இல்லை. முழுநேரப் பணியாளர்களை, மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு பணி அமர்த்த வேண்டிய தேவை இல்லாததோடு, அவ்விதம் பணி அமர்த்துவதற்கு அவைகளுக்கு நிதி வசதியும் இல்லை. எனவே, பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளபடி கிராம ஊராட்சிகளில் பகுதிநேரப் பணியாளர்களை பணி அமர்த்தும் முறை தொடர்ந்து இருக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது.

2. மேலும், கிராம ஊராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் விசைப்பம்பு / மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் போன்ற தொகுப்பு ஊதியம் பெறும் பகுதிநேரப் பணியார்களின் பணிநேரம் ஊராட்சிக்கு ஊராட்சி வேறுபடும். என்பதாலும் ஒவ்வொரு ஊராட்சியும் வெவ்வெறு நிதி நிலையுடைய தனித்தனி அலகுகள் என்பதாலும் அனைத்து கிராம ஊராட்சிகளும் பகுதிநேரப் பணியாளர்களுக்கு ஒரேவீத தொகையை தொகுப்பு ஊதியமாக அளிக்கவும் இயலாது. எனவே. துப்புரவு பணியாளர்கள். விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகிய பகுதிநேரப் பணியாளர்களுக்கு. தற்பொழுது மாதம் ரூ.150/– க்கு மிகாமல் தொகுப்பு ஊதியம் நிர்ணயித்து வழங்கி வருவதை அந்தந்த கிராம ஊராட்சியிலுள்ள பணியின் தன்மை, நிதிநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு. மாதம் ரூ.250/–க்கு மிகாமல் உயர்த்தி நிர்ணயித்து வழங்குமாறு தற்போது அரசு ஆணையிடுகிறது. இதற்கான கூடுதல் செலவை அந்தந்த கிராம ஊராட்சி நிதியிலிருந்தே செய்யப்பட வேண்டும்.

3. இந்த அரசாணையின் படிகளை (Copies) அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் உடனே அனுப்புமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. இந்த அரசாணை நிதித்துறைன் 141/JS(LSR)-97 எண்ணும் 26/5/97 நாளும் இட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயண்**
அரசு செயலாளர்